## தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை – 6.

**ந.க.எண்.019528/எம்/இ1/2022, நாள். .02.2023**

**பொருள்** பள்ளிக் கல்வி கல்விசாரா செயல்பாடுகள் – 2022–2023 ஆம் கல்வியாண்டில் சிறார் திரைப்படங்கள் திரையிடுதல் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்– முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

**பார்வை**

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்.019528/எம்/இ1/2022, நாள் 22.08.2022.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள்.10.01.2023.

*******

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி, ஒவ்வொரு மாதமும் அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் இம்மாதம் **பிப்ரவரி 13 முதல் 17 வரை** மல்லி தமிழ் திரைப்படம் திரையிடப்பட வேண்டும். இந்த படத்தின் சுருக்கம் இந்த சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது குறித்த கட்டுரை, தேன்சிட்டு இதழிலும் வெளிவந்துள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலும் திரைப்படம் திரையிடல் நடவடிக்கைக்காக ஒரு ஆசிரியருக்கு பொறுப்பு அளிக்க வேண்டும். தலைமை ஆசிரியருடன் இணைந்து பொறுப்பு ஆசிரியரும் பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்.

**<u>திரையிடலுக்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டியவை</u>:**

- இணைப்பு மூலம் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்ட திரைப்படத்தை மட்டும் திரையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- பதிவிறக்கம் செய்வதில் சிக்கல் இருந்தால் பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்றுநர் அல்லது மாவட்ட ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ள வேண்டும்.
- பொறுப்பு ஆசிரியர் திரைப்படம் திரையிடும் நாளுக்கு முன் படத்தைப் பார்க்க வேண்டும் கதை சுருக்கத்தைப் படித்து, படத்தின் கதைக்களத்தை வெளிப்படுத்தாமல் குழந்தைகளுக்கு அடிப்படை பின்னணியைக் கொடுக்க வேண்டும்.
- வகுப்பறையை திரையிடலுக்கு தயார் செய்ய வேண்டும். வகுப்பறையில் வெளிப்புற ஒளி குறைவாக இருப்பதையும் போதுமான காற்று வசதி உள்ளதையும் உறுதி செய்திடல் வேண்டும்.
- மின் இணைப்புகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.

- நிகழ்ச்சியின் போது வகுப்பறையில் போதுமான குடிநீர் வசதி இருப்பதை உறுதி செய்திடல் வேண்டும்.
- வகுப்பறையில் திரைப்படக்காட்டி (Projector) இல்லாத பள்ளிகளில், பள்ளிமேலாண்மைக் குழுக்கள் (SMC) வாயிலாக வாடகைக்கு பெற்று திரையிடவேண்டும்.
- திரையிடலுக்கு ஒரு சுவரைப் பயன்படுத்தினால் அது தெளிவான வெள்ளை சுவராக இருக்க வேண்டும்.

**திரைப்படத்தைப் பதிவிறக்கம் செய்தல்:**

- கொடுக்கப்பட்டுள்ள லிங்கை கிளிக் செய்யவும்
- http://shorturl.at/olS13
- இணைப்பைக் கிளிக் செய்தவுடன், அது பதிவிறக்கமாகும் வரை காத்திருக்கவும், அதிவேக இணையம் என்றால் 7–10 நிமிடங்கள் அல்லது குறைந்த வேக இணைய வசதியாக இருந்தால் 15–20 நிமிடங்கள் வரை ஆகும்.
- ஆனால் அது முழுமையாக பதிவிறக்கம் செய்யும் வரை காத்திருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேற்காண் அறிவுரைகளை பின்பற்றி அனைத்து நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளிலும் சிறார் திரைப்படத்தை 6–ம் வகுப்பு முதல் 9–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவரும் பார்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்/மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை/தொடக்ககல்வி) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:** இணைப்புகள் 1, 2

**பள்ளிக் கல்வி ஆணையருக்காக**

2/2/23

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள். -(மின்னஞ்சல் வழியாக)

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம்,
   சென்னை - 9.
2. மாநிலத் திட்ட இயக்குநர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6.

## இணைப்பு–1

### மல்லி திரைப்படத்தின் கதைச்சுருக்கம்

மல்லி என்பது சந்தோஷ் சிவன் அவர்கள் இயக்கிய 1998 ஆம் ஆண்டு வெளி வந்த இந்திய தமிழ் மொழி திரைப்படமாகும். மல்லி(பி.ஸ்வேதா) என்ற ஏழை குடும்பத்தைச் சார்ந்த ஒரு சிறுமியின் கதையை மையமாக வைத்து இப்படம் சுழல்கிறது, அவர் தனது குடும்பத்திற்கு உதவுவதற்கா விறகு சேகரித்து, அருகிலுள்ள காட்டில் விளையாடி, காது கேளாத, வாய் பேச இயலாத தன் தோழியுடன் தனது பெரும்பாலான நேரத்தை செலவிடுகிறார். அவளுடைய பல கனவுகளில், முக்கியமான ஒன்று என்னவென்றால், கலகலப்பான திருவிழாவிற்கு அணிவதற்கு வண்ணமயமான ஆடை ஒன்றை பெற வேண்டும் என்பது தான். இவ்வாறாக, தனது தேடலின்போது, ஒரு பழைய, உள்ளூர் கதைச் சொல்லியை, அவள்சந்திக்கிறாள். அவளுடைய நெருங்கிய தோழிக்கு பேசும் திறனை கொடுக்க கூடிய ஒரு மந்திர நீலநிற கல்லின் கதையை அவளுடன் அவர் பகிர்ந்து கொள்கிறார். அவளுடைய இந்த புதிய அத்தியாயத்தின், அம்மர்மமான நீல நிற அதிசய கல்லைக் கண்டுபிடிக்க அவள் புறப்படுகிறாள்.

இந்த படம் வெளியானதும் பரவலான விமர்சன பாராட்டைப் பெற்றது மற்றும் டொராண்டோ சர்வதேச திரைப்பட விழா மற்றும் நியூயார்க் சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழா உள்ளிட்ட பல திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது. இது 1999–ம் ஆண்டு 46வது தேசிய திரைப்பட விருதுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய சிறந்த திரைப்படம் மற்றும் சிறந்த குழந்தை கலைஞர் விருதுகளை வென்றது.

# இணைப்பு–2

| வ.எண் | கால அளவு | அம்சம் | நடத்தக்கூடியவர் / உறுதி செய்பவர் |
|---|---|---|---|
| 1 | 10 நிமிடங்கள் | படம் திரையிடுவதற்கு வகுப்பறை தயாராக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள | பொறுப்பு ஆசிரியர் |
| 2 | 15 நிமிடங்கள் | திரைப்படம் திரையிடப்படும் அறையில் அனைத்து குழந்தைகளையும் கூட்ட | வகுப்பு ஆசிரியர்கள் உதவியுடன் பொறுப்பு ஆசிரியர் |
| 3 | 5 நிமிடங்கள் | சிறப்பு அழைப்பாளர் அறிமுகம் | த.ஆசிரியர்/பொறுப்பு ஆசிரியர் |
| 4 | 5 நிமிடங்கள் | படத்தின் அறிமுகம் (கதை சுருக்கம்) | பொறுப்பு ஆசிரியர் |
| 5 | 80 நிமிடங்கள் | படம் திரையிடல் | பொறுப்பு ஆசிரியர் |
| 6 | 7-10 நிமிடங்கள் | கருத்து அமர்வு | 2 - 3 குழந்தைகள்பேசுவார்கள் |
| 7 | 15 நிமிடங்கள் | கவனத்தை ஈர்த்தல் *(Spotlight)* | பொறுப்பு ஆசிரியர் (ஒரு பெரிய குழுவாக இருந்தால் பிற ஆசிரியரின் உதவியை பெறலாம்) |
| 8 | 15 நிமிடங்கள் | சிறப்பு அழைப்பாளர் உரை | பொறுப்பு ஆசிரியர் அறிமுகப்படுத்தி பேச அழைத்தல் |
| 9 | 3 நிமிடங்கள் | நன்றி உரை | பொறுப்பு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் |